**<u>மாவட்ட உரிமையியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சிங்கம்புணரி</u>**

**அசல் வழக்கு எண். 105 /2020 வா.சா.2**

2026–ம் ஆண்டு மார்ச் திங்கள் 17–ம் நாள் செவ்வாய்கிழமை–ன் வாக்குமூலம் 1857 ம் ஆண்டு சட்டப்பிரிவு 10(1)(அ)ன் படி ஆணை உறுதி செய்துவைக்கப்பட்டது.

பெயர்: நல்லதம்பி தந்தை பெயர்: பெரியதம்பி

---

<u>17.03.2026:</u>

<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>

1. நான் மணப்பாறை டவுனில் வசிக்கிறேன் . வாதி அய்யாச்சாமி என்னை சாட்சியம் அளிப்பதற்கு அழைத்து வந்தார் . வாதி அய்யாச்சாமி என்ன வழக்கு கொடுத்தார் என்றால் ஏதோ நிலத்து பிரச்சனை என்று சொன்னார் . அய்யாச்சாமி என்னிடம் எந்த நிலம் என்றால் சர்வே எண் 89/3 சி , 1 ஏக்கர் 37 செண்டாகும். சர்வே எண் 89/3 சி கண்ட சொத்து கானப்பாடியில் உள்ளது . மணப்பாறைக்கும் கானப்பாடிக்கும் 45 கி.மீ துாரம் இருக்கும்.

2. கானப்பட்டியில் உள்ள பொன்னர் சங்கர் கோவிலுக்கு ஜோதி என்பவர் பூசாரியாக வேலை செய்து வருகிறார். நானும் பூசாரி தான். ஜோதிக்கு முன்னால் அவர் அப்பா மூக்க கவுண்டர் பூசாரியாக இருந்தார் என்றால் சரிதான் . மூக்க கவுண்டர் எப்போது இறந்தார் என்று எனக்கு தெரியாது . நான் காணப்பட்டிக்கு வியாபாரத்திற்கு சென்று வருகிறேன். மூக்க கவுண்டருக்கு முன்னால் செல்லகவுண்டர் பூசாரியாக இருந்தாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஜோதி மற்றும் அவரது மூதாதையர் பூசாரியாக இருந்தார்கள் என்றாலும் நான் வழக்கிற்காக பூசாரியாக இருந்தேன் என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

3. வாதி அய்யாச்சாமி ஆய்வாளராக பணிபுரிந்ததாக நான் வியாபாரத்திற்கு போகும் போது சொல்லிகொண்டார்கள். எனது பிரமாணவாக்குமூலத்தில் நான் கமிஷன் மண்டி வைத்து தொழில் செய்ததற்கு ஆவணங்கள் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை . தாவாச்சொத்திக்கு தற்போது யார் பெயரில் பட்டா உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

4. தாவாச்சொத்து வெள்ளையனுக்கு பூர்வீக சொத்தாகும். வெள்ளையனுக்கு 2

பிள்ளைகள் உள்ளார்கள் . எனது பிரமாணவாக்குமூலத்தில் சொல்லப்பட்ட அக்ரிமெண்டானது 09.04.1992 ல் ஏற்பட்டதாகும். அந்த அக்ரிமெண்டானது 1 ரூபாய் பத்திரத்தில் எழுதப்பட்டது . நான் மேற்படி அக்ரிமெண்டில் சாட்சி கையொப்பம் செய்துள்ளேனா என்றால் கையொப்பம் செய்துள்ளேன் . 1 ரூபாய் பத்திரத்தில் கையொப்பம் செய்துள்ளேன். எத்தனாவது கையொப்பம் என்று ஞாபகமில்லை . 2 பேப்பரில் கையொப்பம் செய்தேன் . அதில் சாட்சி கையொப்பமாக ஆண்டிச்சாமி கையொப்பம் செய்துள்ளார். மற்றொருவர் கைரேகை வைத்துள்ளார். அவர் யார் என்று எனக்கு தெரியாது.

5. அய்யாச்சாமி அந்த பத்திரத்தில் எத்தனை பக்கங்களில் கையொப்பம் செய்தார் என்றால் அதை நான் பார்க்கவில்லை . வெள்ளையன் 2 இடத்தில் கையொப்பம் செய்தார். தாவாச்சொத்தை நான் கடைசியாக 20 வருடங்களுக்கு முன்பாக பார்த்தேன். தற்போது சொத்தினை காவல் ஆய்வாளர் தான் அனுபவித்து வருகிறார் . காவல் ஆய்வாளர் அனுபவிப்பதற்கான பட்டாவோ , சிட்டாவோ, இரசீதோ நான் பார்க்கவில்லை.

6. நான் வாதி அய்யாச்சாமி அனுபவம் செய்வதை வியாபாரத்து போகும் போது கண்ணால் பார்த்தேன். சொத்தை 20 வருடங்களுக்கு முன்பாக பார்த்தேன் என்று சொல்லிவிட்டு அதற்கு முரண்பாடாக ஆய்வாளர் அனுபவித்து வருவதை பார்த்தேன் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல . நான் வாதி அனுபவம் செய்வதை 6 மாதத்திற்கு முன்பாக பார்த்தேன்.

7. எனக்கு காலில் ஏற்பட்ட வீக்கம் காரணமாக விரல் நீக்கப்பட்டது . இவை அனைத்தும் ஒரு மாத காலகட்டத்திற்குள் நடந்தது . நான் 1 ஆண்டு காலமாக சிகிச்சையில் இருந்தேன் என்றாலும் , தாவாச்சொத்தை பார்க்கவில்லை என்றாலும் வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல . தாவாச்சொத்து வெள்ளையனுக்கு பூர்வீக சொத்து என்றாலும் அதை வாதி தனக்கு எழுதிக்கொடுக்க கோர எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல.

8. நான் சொல்லும் அக்ரிமெண்ட் நான் , வாதி அய்யாச்சாமி ஆகியோர் மோசடியாக உற்பத்தி செய்திருந்த ஆவணம் என்றால் சரியல்ல . மோசடியாக மேற்படி ஆவணம் உற்பத்தி செய்ததால் அதன் உண்மைதன்மை தெரியாமல் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல . காலவதியான ஒரு கிரைய ஒப்பந்த

பத்திரத்தை உற்பத்தி செய்த வெள்ளையனின் சொத்தை அபகரிப்பதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.